

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.2.2026) சென்னையில் நடைபெற்ற எஸ்.சிவானந்தம் இ.ஆ,ப, – ஆர்.காவியா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் நூற்றாண்டு அரசு விழாவை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டம், குன்றக்குடி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைந்துள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் மணி மண்டபத்தில் நேற்று (7.2.2026) அன்னாரது திருவுருவச்சிலைக்கு, தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள் மற்றும் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி, நூற்றாண்டு மலரினை வெளியிட்டனர்.

### திருவிடந்தையில் பிப்ரவரி 11 அன்று மாலை நடைபெறும் “என் வாக்குச் சாவடி ! வெற்றி வாக்குச் சாவடி!” மண்டல மாநாட்டில்

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து 30,000 வாக்குச்சாவடி BLA2 - BLC- BDA - BYO குழுவினர் அணி திரண்டு வாரீர்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், பிப்.8-

தமிழ்நாடு முதல்வர் - கழகத் தலைவர் அவர்களின் அன்பு அழைப்பை ஏற்று, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருவிடந்தையில் பிப்ரவரி 11 -ஆம் தேதி மாலை நடைபெறும் சென்னை - விழுப்புரம் மண்டல “என் வாக்குச் சாவடி ! வெற்றி வாக்குச் சாவடி !” மாபெரும் மாநாட்டில், 1,50,000-க்கும் மேற்பட்ட BLA-2, BLC, BDA, BYO வாக்குச்சாவடி குழுவினர் பங்கேற்கும் வகையில் பிரம்மாண்ட கோலாகல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மாநாட்டில் கழகத் தலைவர் - மாண்புமிகு முதல்வர் அவர்கள் பங்கேற்று எழுச்சி உரையாற்றுவது, சட்டமன்றத் தேர்தலின் முதல் தேர்தல் பரப்புரையாக அமைந்து வரலாறு படைக்கும் என்றும், இந்மாநாட்டில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இருந்து 30,000-க்கும் மேற்பட்ட BLA-2 - BLC - BDA- BYO ஆகிய வாக்குச்சாவடி குழுவினர் அலைகடலென ஆர்ப்பரித்து அணி திரண்டு பங்கேற்க வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

வெற்றி மேல் வெற்றிகளை குவித்து வரும் நம்முடைய ஒப்பாரும் - மிக்காரும் இல்லா அன்புத் தலைவர் அவர்களின் அன்பு கட்டளையை ஏற்று, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் கோவளம் அருகே திருவிடந்தையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் திடலில் வருகிற 11-ஆம் தேதி புதன் கிழமை மாலை 4.00 மணியளவில், சென்னை - விழுப்புரம் மண்டலத்தில் உள்ள 15 கழக மாவட்டத்தில் - 49 சட்டமன்றத் தொகுதில் அடங்கியுள்ள BLA-2 - BLC - BDA- BYO ஆகிய வாக்குச் சாவடி குழுவினர் பங்கேற்கும் மாபெரும் மாநாடு மிகவும் எழுச்சியுடன் கோலாகலமாக நடைபெறவுள்ளது.



1,50,000 -க்கும் மேற்பட்ட BLA -2, வாக்குச்சாவடி நிலைமுகவர்கள், BLC- வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், BYO - வாக்குச்சாவடி இளைஞர் அணி அமைப்பாளர்கள், BDA - வாக்குச்சாவடி தகவல் தொழில்நுட்ப அணி முகவர்கள் உள்ளிட்ட வாக்குச்சாவடி குழுவினர் பங்கேற்க உள்ளனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. முன்னின்று இந்த மாபெரும் நாநாட்டை நடத்துகிறது. பார்ப்போர் அனைவரும் வியக்கும் வகையில் மிகவும் பிரம்மாண்டமான மேடை அமைத்து, சுமார் 10 லட்சம் சதுர அடி பரப்பளவில் மிகவும் எழுச்சியுடன் நடத்த ஏற்பாடுகள் செய்து உள்ளோம்.

மிகவும் கோலாகலமாக நடைபெற உள்ள இந்த மாபெரும் மாநாட்டில் நம்முடைய உயிரினும் மேலான அன்பு தலைவர், திராவிட மாடல் நல்லாட்சி நாயகர் நம்முடைய பாசத்துக்குரிய முதல்வர் அவர்கள் இம்மாபெரும் மண்டல மாநாட்டில் பங்கேற்று வாக்குச்சாவடி குழுவினருக்கு புத்துணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் எழுச்சியுரை ஆற்றுகிறார்.

நம்முடைய மாவட்டத்தில் உள்ள திருவிடந்தையில் நடைபெறும் இத்திருவிழா மாநாட்டில் மாவட்டம் முழுவதிலும் இருந்து 30,000 க்கும் மேற்பட்ட BLA-2, BLC, BDA, BYO வாக்குச்சாவடி குழுவினர் அலைகடலென ஆர்ப்பரித்து அணிதிரண்டு வந்து பங்கேற்றிட வேண்டும் என்று இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கிறோம்.

திருவிடந்தையே குலுங்கிடும் வகையில், நம்முடைய மாவட்டத்தில் இருந்து BLA-2, BLC, BDA, BYO வாக்குச்சாவடி குழுவினர், கொள்கைத் தீரர்களாக கழக கொடி ஏந்தி ஆயிரக்கணக்கில் பெரும் படையாக திரண்டு வந்து, எதிர் வரும் சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்கு கட்டியம் கூறும் வகையில் வகையில் இம்மாநாட்டை வெற்றியடைய செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் - முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று வீர உரையாற்றும் இம்மாபெரும் மாநாட்டில் கலந்துக்கொள்ளவது, “நமது உரிமை” - “நமது கடமை” என்ற அந்த உணர்வோடு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து வாக்குச்சாவடி குழுவினர் அனைவரும், பிப்ரவரி 11-ஆம் தேதி புதன்கிழமை அன்று மாலை 3.00 மணிக்கெல்லாம் திருவிடந்தை கலைஞர் திடலுக்கு அணி அணியாக திரண்டு வந்து பங்கேற்று சிறப்பிக்கும் படி இருகரம் கூப்பி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

“இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்ற பேரறிஞர் அண்ணாவின் வைர வரிகளுக்கு ஒப்பாக இதுவரை இதுபோன்ற பிரம்மாண்டமான மாநாடு நடைபெற்றது இல்லை என்று அனைவரும் கூறும் வகையில், தமிழக அரசியல் வரலாற்றில் புதியதோர் சரித்திர சாதனையை படைத்திடும் வாரீர்! வாரீர்!! என்று அகமகிழ்ந்து அன்புடன் அழைக்கிறோம்.

கடந்த ஓராண்டாக நம்முடைய ஒப்பற்ற தலைவர் முதல்வர் அவர்கள் சட்டமன்றத் தேர்தல் பணிகளைத் தொடங்கி, இந்தியாவில் எந்த ஒரு அரசியல் கட்சியும் இதுவரை செய்யாத வகையில் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் BLA -2, BLC, BDA, BYO ஆகிய வாக்குச்சாவடி குழுவினரை அமைத்து தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தி உள்ளார்.

திருவிடந்தையில் நடைபெறும் இம்மாநாடு வருகிற சட்டமன்றத் தேர்தலின் முதல் தேர்தல் பரப்புரையாக - வெற்றி மாநாடாக அமைந்து சரித்திரம் படைக்கும். சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கவுக்கு கிடைக்கும் இமாலய வெற்றிக்கு அச்சாரமாக அமையும்.

மாற்றுக் கட்சியனரும் மிரண்டு போகும் வகையில், வருகிற 2026- ஆம் ஆண்டு தேர்தலில் மீண்டும் தி.மு.க தான் ஆட்சிக்கு வரும் என மக்கள் அனைவரும் எண்ணும் அளவிற்கு இந்த மாநாடு சரித்திர சாதனையை படைக்கும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பாரா தடகள வீராங்கனை

# கா.சிவகாமி (பார்வை மாற்றுத்திறனாளி)க்கு பாரா தடகள வருகை பயிற்றுநர்கான பணி நியமன ஆணை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**திருச்சி, பிப்.8-**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த பாரா தடகள வீராங்கனை பார்வை மாற்றுத்திறனாளி திருமதி கா.சிவகாமி அவர்களுக்கு பாரா தடகள வருகை பயிற்றுநர் பணிக்கான பணிநியமன ஆணையினை வழங்கினார்.**

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தைச் சேர்ந்தவர் பார்வை மாற்றுத்திறனாளி திருமதி கா.சிவகாமி, தனது சிறு வயதிலேயே தாய், தந்தையை இழந்தவர் ஆவார். இவரும், இவரது சகோதரிகள் சேர்த்து 6 பேரும் பிறந்ததில் இருந்தே பார்வை மாற்றுத் திறனாளிகள் ஆவர்.

பார்வை மாற்றுத்திறனாளியான திருமதி கா.சிவகாமி அவர்கள் பாரா தடகள பிரிவில் குண்டு எறிதல் மற்றும் வட்டு எறிதல் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றுள்ளார். தொடர்ந்து தேசிய அளவிலான பாரா தடகள போட்டிகளிலும் பங்கேற்று பதக்கங்களை வென்றுள்ளார். மேலும் ஆசிய, சர்வதேச அளவிலான பாரா தடகள போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

கடந்த 4 நாட்களுக்கு முன்னர் இவர் சென்னை தலைமைச் செயலகத்தில் தான் வென்ற பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களுடன் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து தனது குடும்பச் சூழலை தெரிவித்து பணி வாய்ப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் உடனடியாக பணி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதன்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருச்சிராப்பள்ளியில் 6.2.2026 அன்று அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த பாரா தடகள வீராங்கனை பார்வை மாற்றுத்திறனாளி திருமதி கா.சிவகாமி அவர்களுக்கு பாரா தடகள வருகை பயிற்றுநர் பணிக்கான பணி நியமன ஆணையினை வழங்கினார்.

இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

# திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடியில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை கூட்டம்!

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு!

திருவள்ளூர், பிப். 8-

திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதி ஆவடி மாநகராட்சி கலைஞர் திடலில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை கூட்டம் நடைபெற்றது.

பகுதி கழகச் செயலாளர் ஜி.ராஜேந்திரன் தலைமை வகித்தார் மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், ஆவடி மேயர் ஜி.உதயகுமார் பகுதி கழக செயலாளர் பேபிசேகர், பொன்.விஜியன், ஜி.நாராயண பிரசாந்த், என்.இ.கே.மூர்த்தி, தி.வை. ரவி, டி.தேசிங்கு ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்

ஆவடி தெற்கு பகுதி நிர்வாகிகள் இரா.ருக்கு, கோ. கார்த்திகேயன், தா.வின்சென்ட், கீதா யுவராஜ், இரா.செல்வராஜ், எம். பாலா, வி.ஹரி, எம்.குமார், எம்.ராஜேந்திரன், ஏ.கே. சகாபுதீன் ஆகியோர் வரவேற்புரையாற்றினார்கள்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கழக அயலக அணி தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி ஆகியோர் கலந்து கொண்டு திமுக செய்த சாதனைகளை சிறப்புரையாற்றினார்கள்

அப்போது பேசிய அமைச்சர்

ஒட்டுமொத்த இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் முதலமைச்சர் ஸ்டாலின் செயல்படுத்தி வரும் திட்டங்களை வெகுவாக பாராட்டி வருகின்றனர். நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விட தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.6 சதவீதம் உயர்ந்து உள்ளது. தமிழ்நாட்டில் செயல்படுத்தி வரும் திட்டங்கள் பாஜக ஆளும் மாநில முதல்வர்களும் பாராட்டும் அளவில் திட்டங்கள் அமைந்துள்ளது. இருப்பினும் ஒன்றிய பாஜக அரசு தமிழகத்திற்கு உரிய அங்கீகாரம் வழங்காமல் நிதிகள் வழங்காமல் வருகிறது. ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு வளர்ச்சிக்கு திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யாமல் வஞ்சித்து வரும் பாஜக அதிமுக கூட்டணிக்கு சட்டமன்ற தேர்தலில் மக்கள் பாடம் புகட்ட தயாராகி விட்டனர். பெண்கள், மாணவர்கள், இளைஞர்கள் உட்பட அனைத்து தரப்பு மக்களுக்கும் ஏற்றம் பெறும் வகையில் திட்டங்கள் தீட்டி செயல்படுத்தி வரும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 2வது முறையாக வெற்றி பெற்று மேலும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தி தமிழ்நாடு உலக அளவில் சிறந்த மாநில என்ற நிலைக்கு முன்னேறும் என்று பேசினார்.

இந்நிகழ்ச்சியில் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஜி.ஜெரால்டு, நிவேதா ஜெசிகா, மாவட்ட கழக நிர்வாகிகள் மா.ராஜி, வி. ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன் । தொழுவூர் பா.நரேஷ்குமார்,பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி. விமல் வர்ஷன், ஜெ.மகாதேவன் காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர் ஒன்றிய நகர பேரூர் கழகச்செயலாளர்கள் ஜி.ஆர்.திருமலை ப.ச. கமலேஷ் சே.பிரேம்ஆனந்த், தி.வே.முனுசாமி, டி.முரளி கிருஷ்ணன், மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சி முன்னதாக இளைஞர்கள் மாணவர்கள் தன்னார்வ அமைப்புகள் தொழிற்சங்க தொழில் முனைவர் கல்வியாளர்கள் விவசாய சங்கங்கள் வியாபாரி சங்கங்கள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் சமூக நல்லிணக்க பிரதிநிதிகள் ஆட்டோ ஓட்டுனர்கள் ஆகியோர் எதிர்பார்ப்பு கோரிக்கைகள் குறித்து அமைச்சர் நாசர் கோரிக்கைகளை கேட்டு அறிந்து கலந்துரையாடல் நிகத்தினர் இதனை அடுத்து ஆவடி சட்ட மன்ற தொகுதியில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி கௌரவித்தனர்.




தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை செயல் திட்டத்தின் கீழ் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் திருப்போரூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் எல்.இதயவர்மன் தலைமையில் நடைபெற்ற திராவிட மாடல் அரசின் 5 ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றினார். அருகில் கழகத் துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா, கழக கொள்கை பரப்புச் செயலாளர் முனைவர் சபாபதி மோகன், மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன், ஒன்றிய செயலாளர் பையனூர் எம்.சேகர், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ் ஜி.டி.யுவராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (07.02.2026) வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி, அகத்தியர் நகரில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டு வரும் உள்விளையாட்டு அரங்கம் மற்றும் விளையாட்டுத் திடல் முன்னேற்றப் பணிகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது சட்டமன்ற உறுப்பினர் வெற்றி அழகன், சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர் கூ.பி.ஜெயின், மாவட்ட வருவாய் அலுவலர் மு.இந்துமதி, உள்ளாட்சி பிரதிநிதி வே.வாசு, மாமன்ற உறுப்பினர் திருமதி.சுதா தீனதயாளன், சி.எம்.டி.ஏ. கண்காணிப்புப் பொறியாளர் பாலமுருகன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.